# பத்திரிக்கைச் செய்தி
## புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் - சிவகங்கை மாவட்டம்
## பள்ளி சத்துணவு மைய அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான நேரடி நியமனம்
## (பெண்கள் மட்டும்)

ந.க.ஆர்4/10852/2020. நாள்: 24.09.2020

சிவகங்கை மாவட்டத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் பள்ளி சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள 184 அமைப்பாளர் மற்றும் 442 சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் பின்வரும் தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்கண்ட காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் (பெண்கள் மட்டும்) விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ்களின் நகல்களுடன் பூர்த்தி செய்து தங்களுக்கு தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் / நகராட்சி அலுவலகங்களில் 25.09.2020 முதல் 03.10.2020 அன்று மாலை 5.00 மணிக்குள் நேரிலோ அல்லது பதிவஞ்சல் தபால் மூலமாகவோ தொடர்புடைய ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகத்தில் கிடைக்குமாறு அனுப்பவேண்டும். 03.10.2020 மாலை 5.00 மணிக்கு பிறகு காலதாமதமாக தபால் மூலம் மற்றும் நேரடியாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகத்திலும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளலாம் மேலும், 25.09.2020 முதல் **WWW.Sivaganga.tn.nic.in** என்ற இணையத்தளத்தில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இனசுழற்சி முறையும் இணையத்தளத்தில் அறியலாம்.

| வ. எண் | பணி விபரம் | கல்வித்தகுதி | வயது வரம்பு (31.08.2020-ம் தேதியினை அடிப்படையாக கொண்டு) |
|---|---|---|---|
| 1. | அமைப்பாளர் | ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>❖ பழங்குடியினர் (ST) எட்டாவது தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும். | ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், குறிப்பிட்ட தேதியில் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>❖ பழங்குடியினர்(ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>❖ விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>❖ மாற்றுத்திறனாளிகள் 43 வயதுக்கு மிகாமல் இருக்கவேண்டும்.<br>❖ சத்துணவு மைய கணக்குகளை தனியே பராமரிக்கும் தகுதி பெற்றிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | ❖ மாற்றுத்திறனாளிகளுக்கு அமைப்பாளர் பணியிடத்திற்கு 4% சதவீதம் ஒதுக்கீடுஅனுமதிக்கப்படும் |
| 2. | சமையல் உதவியாளர் | ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்-பட்டோர் 5-ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவர்.<br>❖ பழங்குடியினர் (ST) எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். | ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், குறிப்பிட்ட தேதியில் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>❖ பழங்குடியினர்(ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>❖ விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். |

- ❖ காலியாகவுள்ள பணியிடங்கள் அரசாணையின்படி நிரப்பப்படும். கல்வித்தகுதி, இருப்பிடம், சாதி, விதவை / கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் இதர முன்னுரிமை ஆகியவற்றுக்கான ஆதார சான்று நகல் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
- ❖ நியமன பணியிடத்திற்கும் விண்ணப்பத்தாரர் குடியிருப்பிற்கும் இடையே உள்ள தூரம் 3 கி.மீ.-க்குள் இருக்க வேண்டும். விண்ணப்பிக்கும் காலியிடமுள்ள பள்ளி, பள்ளிகளுக்கான இனசுழற்சி விவரம், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- ❖ விண்ணப்பிக்கும் மையத்தின்பெயர் மற்றும் இனசுழற்சி முறை தெளிவாக குறிப்பிடவேண்டும்.
- ❖ தகுதியற்ற விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்விற்கு அழைப்புக்கடிதம் அனுப்பப்படமாட்டாது.
- ❖ வயது வரம்பு 31.08.2020-ம் தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

**<u>சான்றுகள் இணைக்கப்படவேண்டிய விபரம்:</u>**
(விண்ணப்பத்துடன் சான்றிதழ் நகல் மட்டும் இணைக்கப்படவேண்டும்)

1. பள்ளி மாற்றுச்சான்றிதழ் (TC) ஜெராக்ஸ் நகல்
2. மதிப்பெண் சான்றிதழ் நகல்
3. குடும்ப அட்டை நகல் (Ration Card)
4. இருப்பிடச்சான்று நகல்
5. சாதி சான்றிதழ் நகல்
6. வருமானச்சான்று நகல்
7. விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்களாக இருப்பின் உரிய அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் நகல்
8. மாற்றுத்திறனாளிகளாக இருப்பின் அதற்கான சான்றிதழ் நகல்.

24/9/2020

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**சிவகங்கை.**

 24/09/20